பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 02 2026** **SUNDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** மலேசியாவில் தாம் மேற்கொண்ட அரசு முறைப்பயணம் இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் -2 தேர்வுகள் நிர்வாக குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்டுள்ளதற்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உட்பட தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**3)** திமுக ஆட்சியில் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு முரளிதர் மொஹல் குறை கூறியுள்ளார்.

**4)** மகளிர் நலனுக்கு திமுக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**5)** ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gurpreet Singh** தங்கப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

மலேசியாவில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லி புறப்பட்டார்.

தமது பயணம் இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்று சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற ஆசியான் உச்சிமாநாட்டில் தாம் பங்கேற்க இயலாததை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், நடப்பாண்டில் முதல் அரசு முறை வெளிநாட்டு பயணமாக மலேசியா சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

மலேசிய பிரதமர் அளித்த மதிய விருந்து நிகழ்ச்சியில் எம் ஜி ஆர் என ரசிகர்களால் போற்றப்படும் மறைந்த முதலமைச்சர் எம் ஜி ராமச்சந்திரனின் திரைப்பட பாடல் இசைக்கப்பட்டது குறித்து தமிழில் பதிவிட்டுள்ள பிரதமர், அது தொடர்பான காணொலியையும் பகிர்ந்துள்ளார்.

***(Sound Byte — பாடல் — 32 Sec.)***

மலேசிய பிரதமரும் எம் ஜி ராமச்சந்திரனின் தீவிர ரசிகர் என்றும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் -2 தேர்வுகள் நிர்வாக குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்டுள்ளதற்கு தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்வு மையங்கள் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டதாகவும், சில இடங்களில் வினாத்தாள் வரவில்லை போன்ற குளறுபடிகள் நடைபெற்றுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக தேர்வர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அரசு பணியிடங்களுக்கான தேர்வைக்கூட ஒழுங்காக நடத்த முடியாத நிலையில் திமுக அரசு உள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

திமுக அரசின் அலட்சியத்தால் இளைஞர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், அதி முக்கியத்துவம் வாய்ந்த தேர்வு,

தேர்வு நாளன்று ஒத்திவைக்கப்படுவது தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துக்கு காரணமான அதிகாரிகள் மீது உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரனும், திமுக அரசின் நிர்வாகத் தோல்விக்கு இளையோரின் பல மாத உழைப்பு வீணாவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேர்வு தொடர்பான குழப்பங்கள் ஏதேச்சையாக நடைபெற்றதா என்பது குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கு உள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்காலத்தில் இதுபோன்ற தவறு நடக்காமல் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், போட்டித் தேர்வுகளுக்கான அடிப்படை

ஏற்பாடுகளைகூட திமுக அரசு முறையாக மேற்கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்காக ஆட்சியாளர்கள் வெட்கி தலைகுனிய வேண்டும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து விசாரணை நடத்தி, குளறுபடிக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

திமுக ஆட்சியில் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு முரளிதர் மொஹல் குறை கூறியுள்ளார்.

திருப்பூர் அனுப்பர்பாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்கள் பாதுகாப்பில் தமிழகம் 21-ஆவது இடத்தில் உள்ளதாக குறிப்பிட்டார்.

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து பெங்களூரு மற்றும் ஹைதராபாத்துக்கு அதிவேக ரயில் வழித்தடங்கள் உருவாக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் இதில் இடம்பெற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் திரு முரளிதர் மொஹல் கூறினார்.

<<<<<<>>>>>

மகளிர் நலனுக்கு திமுக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள திருமண மாளிகையை திறந்துவைத்து அவர் பேசினார்.

மகளிர் நலனுக்காக திமுக அரசு நிறைவேற்றிவரும் திட்டங்களை திரு உதயநிதி ஸ்டாலின் பட்டியலிட்டார்.

<<<<<<>>>>>

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே யானைகள் தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்று அப்பகுதியை சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — மூர்த்தி — 39 Sec.)***

<<<<<<>>>>>

சேலம் மாவட்டம் உத்தமசோழபுரத்தில் உள்ள ஆயிரத்து 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு கரபுரநாதர் திருக்கோவில் கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் - 56 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட 9 தீயணைப்பு நிலையங்களில் நாளை காலை 10 மணி தொடங்கி, பிற்பகல் ஒரு மணிவரை தீத்தடுப்பு விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட உள்ளது.

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள்மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் பணிபுரியும் தனியார் பாதுகாவலர்கள் இதில் பங்கேற்கலாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

----------------

வார விடுமுறை தினமான இன்று கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gurpreet Singh** தங்கப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **25** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்பிரிவில் **Harsh Gupta** வெள்ளிப்பதக்கத்தையும், **Amanpreet Singh** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

-------------

அஜர்பைஜான் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Devika Sihag** தங்கப்பதக்கத்தையும், **Navya Kanderi** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் ராதிகா சர்மா — சாத்விக் ரெட்டி இணை தங்கப்பதக்கம் வென்றது.

-----------------

ஆசிய உள் அரங்கு தடகள போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **Heptathlon** பிரிவில் **Tejaswin Shankar** தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் உயரம் தாண்டுதலில் பூஜா சிங்கும், ஆடவர் குண்டு எறிதலில் **Tajanderpal Singh Toor**-ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் நீளம் தாண்டுதலில் **Ancy Sojan** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**<<<<<<END>>>>>>**